# வாழ்வார் என்றும் பேராசிரியர்!



எவரும் நமக்குத் தாழ்ந்தவர் இல்லை!
எவர்க்கும் நாமும் தாழ்ந்தவர் இல்லை!
சுவரில் எழுதிய சித்திரம் போலே
சொன்னவர் இப்படிப் பேரா சிரியர்!

பெரியார், அண்ணா இன்றைக் கில்லை!
பெரிய வெற்றிடம் நமக்கின் றில்லை!
இருவரின் வடிவாய் கலைஞர் இருக்கிறார்!
என்று மொழிந்தவர் பேரா சிரியர்!

சூடும் சொரணையும் சொற்களில் தந்தவர்!
சுயமரி யாதை உடுத்தி நடந்தவர்!
ஏடும் நாடும் போற்ற வாழ்ந்தவர்!
இனமானக் காவலர் பேரா சிரியர்!

வலைப்ப டாதவர் வஞ்சகம் சூழ்ச்சியில்!
மயங்கி விடாதவர் வெற்றுப் புகழ்ச்சியில்!
குலப் பகைவரும் குறைசொல்ல முடியாக்
கொள்கைச் சூரியன் பேரா சிரியர்!

வான்மழை போலே கருணை பொழிந்தவர்!
வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றென நின்றவர்!
தேன்மக ரந்தப் பூந்தமிழ்! எங்கள்
திராவிடத் தென்றல் பேரா சிரியர்!

ஏற்ற பொறுப்புக்குப் பெருமை சேர்த்தவர்!
எளிய தொண்டரை அரவ ணைத்தவர்!
சீற்றப் புயலாய் இனப்பகை முன்னே
சினந்து கனன்றவர் பேரா சிரியர்!

வண்கடல் அலையாய் ஆர்ப்ப ரித்தவர்!
வடக்கின் இடக்கை நேர்ள திர்த்தவர்!
கிண்கி ணீர்எனும் வெண்கலக் குரலால்
கீர்த்தி படைத்தவர் பேரா சிரியர்!

எங்கும் தமிழே! எதிலும் தமிழே!
இன்னுயிர் ஆகும் அன்னை நிலமே!
சிங்க மறவனே! சிலிர்த்தெழு வாய்!எனத்
தீக்கனல் பெய்தவர் பேரா சிரியர்!

எதுநம் பண்டைய தமிழ்மர பென்றும்
எதுநம் தொல்புகழ் வரலா றென்றும்
“புதுவாழ்வு” என்னும் இதழை நடத்திப்
பொன்னொளி தந்தவர் பேரா சிரியர்!

எத்தனைச் சோதனை இடர்தொடர் கணையாய்!
இடம்பிற ழாமல் தடம்புர ளாமல்
அத்தனைக் களத்திலும் தலைமைக்குத் துணையாய்
அருகில் இருந்தவர் பேரா சிரியர்!

ஆட்சியில் கழகம் வாகை சூடவும்
ஆதிக்க இந்தி அஞ்சி ஓடவும்
மூச்சும் பேச்சும் நிற்கும் வரைக்கும்
முழக்கம் செய்தவர் பேரா சிரியர்!

கலைஞரை என்னைப் பிரிக்க நினைப்பவன்
கலப்படம் இல்லாத முட்டாள்! என்றே
தலைமைச் செயற்குழு மண்டபம் அதிரச்
சாற்றிய கோமான் பேரா சிரியர்!

நதியென இயங்கும் நல்ல இளைஞன்!
நாட்டுக்கும் மொழிக்கும் கழகத் திற்கும்
“புதிய விடியல் ஸ்டாலின்” என்றே
புகழ்ந்து மகிழ்ந்தவர் பேரா சிரியர்!

வீட்டுச் சாவியைப் பிள்ளைக்கு வழங்கிட
வேறெவன் அனுமதி வேண்டும்? “ஸ்டாலின்”
ஆற்றல் தகுதியைக் கலைஞரும் நானும்
அறிவோம் என்றவர் பேரா சிரியர்!

உளமார் பொதுக்குழு ஒருமன தாக
ஒப்புதல் தந்தது! உமக்கு மட்டுமா?
“ தளபதி ஸ்டாலின்” இனிமேல், எனக்கும்
தலைவர் என்றவர் பேரா சிரியர்!

தொண்டறச் செம்மல்! நமக்குள் என்றும்
துலங்கும் ஒளியாய் விளங்கி மிளிர்வார்!
வண்டமிழ் முழங்கும் எண்டிசை எங்கும்
வாழ்வார் ஐயா பேராசிரியர்!

– **கவிச்சுடர் கவிதைப்பித்தன்**



துணை முதல்வர் பிறந்த நாள்:

## திருநின்றவூரில் அமைச்சர் சா.மு.நாசர் நலஉதவிகள் வழங்கினார்!

சென்னை, டிச. 20 -

தமிழ்நாடு துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் நலத்திட்ட உதவி மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் திருத்தணியில் நடைபெற்றது

அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் வியாபாரி ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவி மற்றும் அன்னதானம் வழங்கினார்

இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், இ.குருதாஸ், எம்.மிதுன் சக்ரவர்த்தி, வி.கிஷோர், ராஜேஸ்வரி ரவீந்திரநாத், கே.என்.சுப்பிரமணி, வி.வினோத் குமார், கூளூர் எம்.ராஜேந்திரன், சி.ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பிடி.சந்திரன், பெ.பழனி, சி.என்.சண்முகம், கே.ராஜேந்திரன், டி.ஆர்.கே.பாபு, நகர மன்ற துணை தலைவர் சாமிராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




‘அடுத்த கட்டத்தின் ஒவ்வொரு முயற்சிக்கும் வாழ்த்து!

## கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்குப் பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 20 -**

**கிரிக்கெட் வீரர் அஸ்வின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

**நன்றி ரவிச்சந்திரன் அஷ்வின்!**



தங்களது வியத்தகு கிரிக்கெட் பயணம் இரசிகர்கள் எண்ணி மகிழ எண்ணற்ற பல நினைவுகளை வழங்கியுள்ளது; பல லட்சம் பேரை எல்லைகள் கடந்து பெரிதாகக் கனவு காண ஊக்குவித்துள்ளது.

தங்களது வாழ்க்கையின் அடுத்த கட்டத்திலும் ஒவ்வொரு முயற்சியிலும் ஒப்பற்ற திறமையை வெளிப் படுத்திப் பெரும் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

‘நாட்டின் ஜனநாயகத்தை அழித்திடும்’ என்று எச்சரித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ஒரே நாடு - ஒரே தேர்தல் மசோதாவை கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்புக!

### மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு – அறிமுக நிலையிலேயே கடும் எதிர்ப்பு!

**புதுடெல்லி, டிச. 20 -**

**ஒன்றிய அரசு அறிமுகம் செய்துள்ள ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதா நாட்டின் ஜனநாயகத்தையும், பன்முகத் தன்மையையும் அழித்துவிடும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரித்துள்ளார் என்று மக்களவையில் குறிப்பிட்ட கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தி.மு.க. சார்பில் ஆரம்ப நிலையிலேயே அம்மசோதாவை கடுமையாக எதிர்த்துப் பேசுகையில் இந்த நரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை கூட்டுக்குழு விசாரணைக்கு அனுப்ப வலியுறுத்தினார்.**

ஒன்றிய பா.ஜ.க. அரசின் “ஒரு நாடு, ஒரு தேர்தல்” திட்டத்துக்கு வழிவகை செய்யும் அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா 17.12.2024 அன்று நாடாளுமன்ற மக்களவையில் சட்டத்துறை அமைச்சர் அர்ஜீன்மேக்வால் அவர்களால் கேள்வி நேரம் முடிந்த பிறகு தாக்கல் செய்யப்பட்டது. முதலில் கடந்த திங்கட்கிழமை அன்று தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்த மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்படவில்லை. ஆனால், திடீரென மசோதா 17.12.2024 அன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதை முன்கூட்டியே எதிர்பார்த்த தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, இது தொடர்பாக கழகத்தின் எதிர்ப்பை தெரிவிக்க மக்களவையில் நோட்டீஸ் ஒன்றையும் சமர்ப்பித்தார்.

**ஆரம்ப நிலையிலேயே தி.மு.க. எதிர்ப்பு!**

இந்த நிலையில் மசோதா தாக்கல் செய்வது தொடர்பான தகவலை அவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்த உடனேயே டி.ஆர்.பாலு எழுந்து மசோதா மீதான தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார். இந்த அரசியலமைப்புச் சட்ட 129வது திருத்த மசோதா தொடர்பாக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், “இந்த ஒருநாடு, ஒருதேர்தல் சட்டம் கூட்டாட்சிக்கு எதிரானது, சாத்தியமில்லாதது. மேலும், இது செயல்பாட்டுக்கு வந்தால் நாட்டின் ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் அழித்திடும்” என்று கருத்துக் கூறியுள்ளார். அவர் கூறியதை அப்படியே மேற்கோள் காட்டினேன் என்று குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட அவைத் தலைவர் ஓம் பிர்லா அவர்கள், “தாங்கள் ஏற்கனவே இது தொடர்பாக நோட்டீஸ் அளித்திருக்கிறீர்கள். எனவே, உரிய சமயத்தில் உங்களுக்கு பேச வாய்ப்பு அளிக்கப்படும் என்றார்.



தொடர்ந்து அவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்கும்படி ஓம் பிர்லா கட்சித் தலைவர்களை அழைத்தார்.

இதனையடுத்து தி.மு.க.வின் சார்பாக பேசிய டி.ஆர்.பாலு அவர்கள், “இந்த அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா நிறைவேற மக்களவையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயம் தேவை. அப்படியில்லாத நிலையில் மசோதாவை தாக்கல் செய்ய அவைத் தலைவரான தாங்கள் எப்படி அனுமதி அளித்தீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்” என அவைத் தலைவர் ஓம் பிர்லா அவர்களிடம் வினா எழுப்பினார். அதற்கு பதிலளித்த அவைத் தலைவர் ஓம் பிர்லா அவர்கள், மசோதா தாக்கல் செய்யலாமா கூடாதா என்பதை, தான் முடிவு செய்ய முடியாது அவைதான் முடிவு செய்ய வேண்டும். அது தொடர்பாகவே தற்போது உறுப்பினர்களின் கருத்து கேட்கப்படுவதாகக் கூறினார்.

தொடர்ந்து பேசிய டி.ஆர்.பாலு குறிப்பிட்டதாவது

வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதியாக ஒருவரை ஐந்து ஆண்டு பதவிக் காலத்துக்கு தேர்ந்தெடுத்து அனுப்ப சட்டரீதியாக உரிமை உள்ளது. அந்த உரிமையை ஒரே சமயத்தில் தேர்தல் (நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் சேர்த்து) என்று கூறி அந்த உரிமையைப் பறிக்க முடியாது. அது மட்டுமல்ல, ஒரே தேர்தல் என்றால் கூடுதலாக 13,981 கோடி ரூபாய் செலவு ஏற்படுவதுடன் மேலும் தேவைப்படும் வாக்குப்பதிவு மற்றும் விவிபேட் எனப்படும் வாக்குப்பதிவு ஒப்புகை சீட்டு எந்திரங்களுக்கும் கூடுதலாக 9284 கோடி ரூபாய் அளவுக்கு அதிக பணச் செலவு ஏற்படும். இது மட்டுமல்லாமல் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக 2015ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கபட்ட தனது 79வது அறிக்கையில் நாடாளுமன்ற நிலைக்குழு ஒரே நேரத்தில் தேர்தல் என்ற கருத்துக்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெற முடியாது என்பதால் இது சாத்தியமற்றது என்ற முடிவை கூறியுள்ளது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தற்போது கொண்டு வரப்பட உள்ள அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு டி.ஆர்.பாலு வலியுறுத்தினார்.

தி.மு.க.வைத் தொடர்ந்து, காங்கிரஸ் உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்யும் ஆரம்ப நிலையிலேயே கடுமையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்தன. அதனால் மசோதாவை கூட்டுக் குழுவுக்கு அனுப்புவது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பில் கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்று ஆதரவு தெரிவித்து 220 உறுப்பினர்களும், எதிர்த்து 149 உறுப்பினர்களும் வாக்களித்தனர். அதன்படி ஒருநாடு, ஒரு தேர்தல் தொடர்பான அரசியலமைப்புச் சட்டம் 129வது திருத்த மசோதாவை நாடாளுமன்றக் கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்பி வைக்க மக்களவை முடிவு செய்தது.

## தமிழ்நாடு அரசின் பொங்கல் சிறப்புத் தொகுப்புகள் விற்பனை தொடக்கம்!

### கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 20 -

தமிழ்நாடு அரசின் பொங்கல் தொகுப்பு விற்பனை மாநிலம் முழுவதும் தொடங்கி நடைபெற்று வருகிறது. 3 வகையான பொங்கல் தொகுப்புகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

பொங்கல் பண்டிகையை ஏழை, எளிய, நடுத்தர மக்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் சிறப்பாக கொண்டாடி மகிழ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முன்னெடுப்பு களை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, பொங்கல் தொகுப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள TUCS காமதேனு கூட்டுறவு அங்காடியில், தமிழ்நாடு அரசின் பொங்கல் தொகுப்பு விற்பனையை அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கி வைத்தார். 7 மளிகைப் பொருட்கள் அடங்கிய 199 ரூபாய் மதிப்புடைய இனிப்பு பொங்கல் தொகுப்பு, 19 மளிகைப் பொருட்கள் அடங்கிய 499 ரூபாய் மதிப்புடைய கூட்டுறவு சிறப்பு பொங்கல் தொகுப்பு, 34 மளிகைப் பொருட்கள் அடங்கிய 999 ரூபாய் மதிப்புடைய பெரும் பொங்கல் தொகுப்பு என 3 வகையான பொங்கல் தொகுப்புகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், பொங்கல் தொகுப்பு விற்பனையை தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் பேசிய கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன், பொங்கல் தொகுப்பைப் பெற்று அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (18.12.2024) சென்னை, தேனாம்பேட்டை, TUCS காமதேனு கூட்டுறவு அங்காடியில், கூட்டுறவுத்துறை யின் மூலம் கூட்டுறவு பொங்கல் என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ள பொங்கல் தொகுப்பு விற்பனையை துவக்கி வைத்தார். உடன் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. ப.காயத்ரி கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

